ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நற்றிணையில் நற்றாயின் தனிமொழி

**முனைவர்.அ.பாரதிராணி**

**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**

**அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி - 3.**

abharathirani78@gmail.com

23

**ஆய்வுச் சுருக்கம்**

நாடக உத்திகளில் ஒன்றான தனிமொழி சங்க இலக்கியப் பனுவல்களில் பரவியுள்ளன. அவற்றில் குறிப்பாக நற்றிணையில் வெளிப்படுத்தப்படும் தனிமொழி எத்தகைய உணர்வினை வெளிப்படுத்துகிறது என்பதையும், எச்சூழலில் இத்தனிமொழி நிகழ்த்தப்படுகிறது என்பதையும், விளக்குவதே இவ்வாய்வின் களமாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

தனிமொழி - தனித்து பேசுதல், - தாழி - பிணமிடும் களம், அலர் - பழிச்சொல், நெஞ்சொடு கிளத்தல் - தனக்குள்ளே பேசுதல், தன்நெஞ்சிடம் கூறுதல் - நற்றாய் - தலைவியின் தாய், வெந்துகள் - வெம்மையான புழுதி, தீம்பால் - இனிய பால்.

**முன்னுரை**

சங்க இலக்கிய அகப்பாடல்கள் மன உணர்ச்சிகளை இயல்பாக வடித்திட்ட பொற்பாலிகை, விழும்மிய கற்பனையும், பொருட்சிறப்பும், வாழ்வியல் விளக்கமும் நிறைந்த இத்தொகுப்பு நாடகக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. உரையாடல் போக்கிலும், கூற்று முறையிலும், தனிமொழிப் போக்கிலும் சங்க அக இலக்கியங்கள் நாடகத்தன்மை வாய்ந்தவை என்பதை உறுதி செய்கின்றன. இவற்றில் எட்டுத்தொகை நூலில் ஒன்றான "நற்றிணையில்" அமைந்த நற்றாயின் தனிமொழி குறித்த ஆய்வினையே இக்கட்டுரை நிரல்படுத்த முனைகிறது.

**தனிமொழி**

தன் மன உணர்வுகளை, எண்ண வெளிப்பாட்டை எடுத்துரைக்க முனையும் தலைவன் தலைவிக்கு, கேட்போர் சரியாக ஒத்த சிந்தனை உடையவராக அமைதல் வேண்டும். அவ்வாறு அமையாத சூழலில் அகமாந்தர்கள் தனித்திருந்து தமது உணர்வுகளை மொழியும் சூழல் உருவாகின்றது. இதனையே தனிமொழி எனலாம். உரையாடல்கள் மூலம் அரங்கேற்றம் செய்யப்படும் நாடகங்களில் "தனிமொழி" என்பது தனித்த இடம் பெறுவதோடு தனிமொழி கிளக்கும் பாத்திரத்தின் மனநிலையினையும் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. மனோன்மணியம் நாடகத்தில் நடராஜன், குடிலன் ஆகியோரின் தனிமொழிகள் அக்காப்பிய நாடகத்திற்கு வலுசேர்த்து நின்றது.

"தனிமொழி என்பது மாந்தர் தமக்குத் தாமே பேசிக் கொள்வது நாடகத்தில் நாடக மாந்தர் மேடையில் தனித்து நின்று தம் எண்ணங்களை வாய்விட்டுக் கூறுவது ஒரு மரபாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாடக ஆசிரியர் நடிக்கும் மாந்தரின் எண்ணங்கள், விருப்பங்கள், மனநிலை இவற்றை நாடகம் காண்போருக்கு வெளிப்படுத்த நாடகத் தனிமொழியைத் தக்க வழியாக ஏற்றுக்கொள்கின்றார்"[1]. நாடக ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் மன உணர்வினை, அறிவு நிலையினை, அப்பாத்திரத்தின் செயலினை, விருப்பத்தை, உள் உணர்வினை எதிரே அமர்ந்திருக்கும் பார்வையாளர்கள் உணர்ந்து கொள்வதற்கு ஏதுவாகவே தனிமொழியினைப் படைத்தளிக்கின்றார்.

நாடக ஆசிரியர் தான் சொல்ல விழையும் பொருளை அல்லது கருத்தை தனிமொழி கூறும் பாத்திரத்தின் வழியாக வெளிப்படுத்தும் உத்தியினைச் சிறப்பாக கையாள்கிறான். செகப்பிரியர் இம்முறையினைத் தன் நாடகங்களில் பயன்படுத்தினார். தீர்க்கமான எண்ண வெளிப்பாடகவே தனிமொழி அமைந்தது. அவ்வகையின் நற்றிணையின் தனிமொழிப் பாடல்கள் சங்க அகப்பாடல்கள் நாடகப் பாடல்களே என்பதற்கு தக்க சான்றாகத் திகழ்கின்றன.

**நற்றிணை**

எட்டுத்தொகை வரிசையில் முதன்மையாய் வைத்துப் போற்றப்படுவது நற்றிணையாம். நல்ல என்ற அடைமொழியுடன் திணைப்பாடல்களால் தொகுக்கப்பெற்ற கலைப் பெட்டகம். நானூறு பாடல்களைக் கொண்டு விளங்கும். இத்தொகுப்பு பல்வேறு புலவர்களின் கருத்துக் கருவுலம். இவற்றுள் தலைவன் கூற்றில் 32 பாடல்களும், தலைவி கூற்றில் 9 பாடல்களும், செவிலி கூற்றில் ஒரு பாடலும், நற்றாய் மொழிப்பாடலில் 3 பாடல்களும், தோழிக்கு இரண்டு என 47 பாடல்கள் தனிமொழி கிளக்கும் பாடல்களாக அமைந்துள்ளன. இவற்றில் நற்றாய் வழி வெளிப்படும் தனிமொழி உணர்வினை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**நற்றாயும் தனிமொழியும்**

அக இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி என்பாரின் பின் நற்றாய் போற்றப்படுகின்றார். தலைவியை ஈன்று புறந்தவன் நற்றாய். அறத்தொடு நிற்கும் நிலையில் நற்றாய் தான் தலைவியின் தந்தை தமையனாரின் ஒப்புதல் பெற்றுத்தரும் முக்கியப் பாத்திரமாக வலம் வருகின்றாள்.

தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்ற காலத்து தலைவியை நினைத்துப் புலம்புகின்ற சூழலில் தனிமொழிக்கூறு வெளிப்படுகின்றது. நெஞ்சோடு கிளக்கும் முறை தனிமொழியினைச் சார்ந்ததே. இதனைத் தொல்காப்பியம்,

**“நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும்”[2] (தொல். நூற் 1142)**

என்று நெஞ்சொடு கிளத்தலுக்கான விளக்கம் தருவதில் தனிமொழியின் சாயலையே எடுத்துரைக்கின்றார் தொல்காப்பியர்.

நெஞ்சொடு புணர்த்தும் நிலைப்பாடு தலைவன் தலைவிக்கு உரியது மட்டுமன்று. அது பிறமாந்தர்களுக்கு சூழலியல் கருதி வெளிப்படுத்தப் படுகின்றது என்பதையே நற்றாயின் தனிமொழி உணர்த்தி நிற்கிறது.

உடன் போக்குச்சென்ற தலைவியை நினைத்துப் புலம்பிடும் நற்றாயின் தனிமொழிகள் செவிலியின் தனிமொழியினை போல அமைந்துள்ளன.உடன் போக்குக் காலத்தில் மட்டுமே தனிமொழிபேசும் பாத்திரமாக நற்றாய் முன்னிறுத்தப்படுகின்றாள்.

**உடன்போக்கில் நற்றாயின் தனிமொழி**:

நற்றினணயின் அறுபத்து ஆறாம்பாடலை இசைந்தநாகனார் இயற்றியுள்ளார். பாலைத்திணையைச் சேர்ந்த இப்பாடலில் நற்றாயின் தனிமொழி புலப்படுத்தப்பட்டுள்ளது. தலைவனுடன் தலைவி உடன் போக்கு சென்றதை அறன் எனக்கருதி மகிழ்கிறாள் நற்றாய். ஆயினும் சுரத்தின் கடுமை உணர்ந்தவளாய் அவ்வழி சென்ற தன் மகளின் நிலை அறிந்து வருந்திப் புலம்பும் நிலையினைப் புலவர் நற்றாய் வழி எடுத்துரைக்கத் துணிகின்றார்.

உகாய்க் காய்களைத் தின்றதால் வருந்தும் உயிரினம் வாழும் சுரத்தின் வழிச் சென்ற தன் தலைவி கூந்தல் சிக்கலையே விடுவிக்கத் தெரியாதவள், வளை கழன்றாலும் பொருத்திக் கொள்ளத் தெரியாதவள், இடையில் தொங்குகின்ற காசுகளை ஒழுங்கப்படுத்தத் தெரியாத பேதை, புழுதிமிக்க, வெப்பம் நிறைந்த வழியிடத்தே செல்வதால் அவளது கண்கள் ஒளிகுன்றி கலக்கம் கொள்ளுமே. இதற்காகவே நான் வருந்துகிறேன் என நற்றாய் நவில்கின்றாள்.

இதனை,

**“புன் புறா உயவும் வெந்துகள் இயவின்**
**நயந்த காதலர் புணர்ந்தனள் ஆயினும்**
**சிவந்து ஒளி மழுங்கி அமர்ந்தன கொல்லோ**

**கோதை மயங்கினும், குறுந்தொடி நெகிழினும்**
**காழ் பெயல் அல்குல் காசு முறை திரியினும்**
**மாண்நலம் கையறக் கலுழும் என்**

**மாயக் குறுமகள் மலர் ஏர் கண்ணே” (நற்.பா.66)**

என்று தெளிவுபடுத்துகிறார் நாகனார். தன் அங்கத்தில் தவழும் முறைமாறிய நிலைபாட்டினையே சரிபடுத்தத் தெரியாத தலைவி வாழ்வை எங்ஙனம் எதிர்கொள்வாள் என்ற தாயின் வருத்தத்தைப் படம்பிடித்துக்காட்டுகின்றார். புலவர்.

**“அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்”[3] (நற்.பா.110)**

என்று போதனார் பாடல் தருவது போல் எத்தனை வயது ஆனாலும் தன் மகள் பேதையாக இருப்பதாகவே தாயின் மனநிலை உள்வாங்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. சுரத்தின் வழியாகச் சென்ற தன் தலைவி பேதமைப்பருவம் கொண்டவள் என்று எண்ணி நற்றாய் புலம்பும் தனிமொழியின் சூழல் கற்பவற்கு தாயின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் களமாகிறது.

**வியப்பு நிலையில் நற்றாயின் தனிமொழி:**

உடன்போக்கு மேற்கொண்ட தலைவியானவள் இளமையிலேயே அறிவு முதிர்ச்சி பெற்ற நிலையை எண்ணி வியந்து நிற்கின்றாள். ஆயினும் இதுவரைத் தன்னைப்பிரியாத தலைவி பிரிந்த நிலையிலும், அவளது செறிவும் கண்டு வியக்கும் நிலையிலும், நற்றாயின் தனிமொழி புனைத்துரைக்கப்பட்டுள்ளது.

தந்தையின் இல்லத்தில் இருக்கும் போது பாலும் தேனும் கலந்த உணவினை உண்ண மறுத்து விளையாட்டு பிள்ளையாய் இருந்த தலைவி, தன் தலைவனின் வறுமை நிலை உணர்ந்து ஒருபொழுது உண்ணாதிருக்கும் முதிர்ச்சி நிலையை எங்ஙனம் பெற்றாளோ என நற்றாய் தனித்துப் புலம்புவதை, போதனாரின் பாடல் இவ்வாறு எடுத்துரைக்கின்றது,

**“பிரசம் கலந்த வெண் சுவைத் தீம் பால்**
**விரி கதிர்ப் பொற் கலத்து ஒரு கை ஏந்தி**
**புடைப்பின் சுற்றும் பூந் தலைச் சிறுகோல்**

**'உண்' என்று ஒக்குபு பிழைப்ப, தெண் நீர்**
**முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தந்துற்று**
**அரிநரைக் கூந்தற் செம் முது செவிலியர்**

**பரி மெலிந்து ஒழிய, பந்தர் ஒடி**
**ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி**

**அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்?**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென**
**கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்**
**ஒழுகு நீர் நுணங்கு அறல் போல**
**பொழுது மறுத்து உண்ணும் சிறி மதுகையளே" ( நற். பா.எ.110 )**

என்ற அடிகள் எடுத்துமொழிகின்றன. தான் வறுமையுற்ற காலத்திலும் தன் தந்தையின் செழுமையான குடிநோக்கி வராமல் ஒருவேளை உண்டு, மறுபொழுது உண்ணாதிருந்து வறுமையிலும் செம்மையாக வாழும் திறனைப் பெற்றவளாகத் தலைவி இல்லறம் நடத்தும் மாண்பினை அறிந்து நற்றாய் மெய் சிலிர்த்து இத்தகு திறம் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்த தலைவியிடத்து எப்படி வந்தது என்று எண்ணி வியப்புறுவதுடன் தலைவியின் முதிர்ச்சிக்காய் மனநிறைவு கொள்கின்றாள்.

மேற்கண்ட நற்றிணைப்பாடல் இருவேறு நிலைப்பாட்டை எடுத்தாள்கிறது. உடன்போக்கு சென்ற முதிர்ச்சி நிலையினில் தலைவியின் செயல்பாட்டையும், மணம் நிகழ்ந்த பின் மனையறம் காக்கும் தலைவியின் மனச் செழுமை நிலையினையும் நற்றாய் வியத்தகு நிலையில் நோக்கி உரைக்கும் தனிமொழிச் சூழலை விளக்கியுள்ளது. இதன் வழி தலைவியின் அறிவு நிலையும், அவளின் பண்பும், மற்றவருக்கு தெற்றென புலப்படுத்தப்படுகிறது.

**அலரினால் வெளிப்படும் தனிமொழி**

உடன்போக்கு என்பது அறநெறியே என்பதை ஏற்றுக்கொண்டது சங்கச்சமூகம். ஆயினும் உடன்போக்கு மேற்கொண்ட தலைவி குறித்து ஊரில் எழும் அலர்மொழிகளைப் பெற்றோரின் உள்ளம் ஏற்கத் துணியவில்லை. இச்சூழலில் நற்றாய் தனிமொழி கிளக்கும் நிலை ஏற்படுகின்றது.

தலைவனின் பொய்மையில் மயங்கி அவனது மார்பில் துயில விருப்பம் கொண்டு சுரம் தாண்டித் தலைவன் நாட்டைச் சேர்ந்திடத் தலைவி துணிந்து சென்றாள். இது அறமாயினும் தலைவியின் உடன்போக்கை அலராக்கி மொழியும் ஊரினர் சொல்லுக்கு வருத்துமுற்று தலைவியைத் தேடி மாலைப்பொழுதில் செல்லும் நிலையினை கூற்றுவன் தந்ததாக எண்ணி நற்றாய்ப்புலம்புகிறாள். மகளைக் காணாது தேடி வருந்தும் நிலையினைக் கூற்றுவன் தந்ததாகவும் அதற்கு முன்பே தன்னுயிர் போகவில்லையே என்று தத்தளிக்கும் தாயின் உணர்வினை,

**"குவளை உண்கண் என்மகள் ஓரன்ன**
**செய் போழ் வெட்டிய பொய்தல் ஆயம்**
**மாலை விரி நிலவில் பெயர்பு புறங்கொண்டதற்கு**
**மா இருள் தாழிகவிப்ப,**
**தா இன்று கழிக, எற்கொள்ளாக் கூற்றே" ( நற்.பா.எ.271 )**

என்ற வரிகள் நிரல்படுத்துகின்றன. கூற்றுவன் மீது சினம் கொண்டு பழியுரைக்கும் நற்றாயின் தனிமொழி பெற்றோரைப் புறம்தள்ளி உடன்போக்கு மேற்கொண்ட பிள்ளைகள் பெற்றோரின் மனநிலையை உணர்ந்து கொள்வதற்கான இடத்தினைத் தேர்வு செய்ய வலியுறுத்துகிறது.

உடன் போக்கென்பது அறமாயினும் அலர் மொழிகளுக்குள் அறம் அகப்படும் நிலையினை நற்றாயின் தனிமொழி எடுத்துக்காட்டுகிறது. நற்றாயின் மிகுந்த வெகுளியை இத்தனிமொழிப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**தொகுப்புரை**

1. நற்றாயின் தனிமொழி தலைவி உடன்போக்கு நிகழ்ந்த காலத்தே நிகழ்த்தப்பட்டுள்ளது.

2. நற்றாயின் மனப்போராட்டம் தனிமொழிக் களனாக அமைந்துள்ளது.
3. தலைவியைப் பிரிந்த தாயின் மனநிலையையும், சுரத்திடச் சென்ற தலைவி குறித்த தாயின் எண்ணப் போராட்டமும் தனிமொழிக்குறிய இடமாக மாறியுள்ளது.
4. பேதைக்குணம் கொண்டவளாகவே நற்றாய்க்கு தலைவி தென்படுவதால், அவளின் செறிவும் அறிவும் வியப்புநிலையினை உருவாக்கித் தனிமொழி கிளக்க இடமளிக்கிறது.
5. அலரின் காரணமாகத் தலைவியினைத் தேடிச்செல்லும் நற்றாய் உள்ளம் வெதும்பி தன்னுயிரைக் கொல்லாத கூற்றுவன் தாழியில் இடப்பட்டு இறந்து படும் நிலையினை எய்ய வேண்டும் என்று வெகுண்டுரைக்கும் சூழலிலும் நற்றாயின் தனிமொழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
6. தனிமொழி என்பது நாடகத்தில் பாத்திரத்தை வழிநடத்தும் ஆசிரியன் அல்லது புலவனுக்கு தன் எண்ண உணர்வினை ஒரு பாத்திரத்தின் வழியாக வெளிப்படுத்த கூடிய களனாகச் செயல்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சங்க இலக்கியத்தில் உரையாடல் - ஆ.அமிர்த கௌரி – பக்.186.
2. தொல்காப்பியம். - பொருளதிகாரம் - ச.திருஞானசம்மந்தம் - பக் 110.
3. நற்றிணை – கு.வெ. பாலசுப்பிரமணியன் -– பக்.200

**துணை நூற்பட்டியல்**

1. சங்க இலக்கியத்தில் உரையாடல் ஆ. ஆ.அமிர்த கௌரி – பாரிநிலையம் – மு.ப.1989
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - ச.திருஞானசம்மந்தம் - கதிர் பதிப்பகம் - மு.ப.2018
3. நற்றிணை – கு.வெ. பாலசுப்பிரமணியன், நியு செஞ்சுரி புக் - ஹவுஸ் – மு.ப.2004